மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி அவர்கள்.

திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் வாலாஜாபேட்டை வட்டாட்சியர் அலுவலகம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது; அது மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அதற்குப் புதிய கட்டடம் கட்ட இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதை இந்த ஆண்டே பரிசீலனையில் எடுத்துக்கொள்வதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 269, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

269—

தொழிற்பயிற்சி நிலையம்

***25650—திரு. கே.எஸ். மஸ்தான்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2018 ஜூலை 4]

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி அமைந்துள்ள விழுப்புரம் மாவட்டத்தில் செயல்பட்டுவரும் 4 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 28 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட இடங்களில் மொத்தம் 1,502 இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. மேலும், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50 சதவிகித இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்ட கலந்தாய்வுமூலம் நிரப்பி பயிற்சிக் கட்டணத்தை அரசே ஏற்கும் திட்டத்தின்கீழ், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ஒப்பளிக்கப்பட்ட 534 இடங்களில் 457 இடங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, 77 இடங்கள் காலியாக உள்ளன. இவ்விடங்களே இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்குப் போதுமானதாக உள்ளதால் செஞ்சி தொகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டிய தேவை தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.*

திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதியில், செஞ்சி, மேல்மலையனூர் என இரண்டு வட்டங்களும், 9 ஒன்றியங்களும், அனங்காபுரம் மற்றும் செஞ்சி பேரூராட்சிகளை உள்ளடக்கிய 300–க்கும் மேற்பட்ட கிராமங்களும் உள்ளன. இங்கே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகளவில் வசித்து வருகின்றனர். மேலும், இங்கு 25 உயர்நிலைப் பள்ளிகளும், 20 மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன. இந்தத் தொகுதியில் அரசு சார்ந்த எந்தக் கல்லூரியும் இல்லாத காரணத்தினால், இப்பள்ளிகளில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகள் அனைவரும், மேற்படிப்பிற்கு திண்டிவனம், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை போன்ற இடங்களுக்கு நீண்ட தூரம் சென்று படிக்க வேண்டிய சூழ்நிலை உள்ள காரணத்தினால், தொழிற்பயிற்சிக் கூடத்தில் சேர்கின்ற மாணவர்களுடைய ஆர்வம் மிகவும் குறைந்து வருகிறது.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

திரு. கே.எஸ். மஸ்தான்: *எனவே, கிராமப்புற மாணவர்களின் நலன் கருதி, செஞ்சி தொகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சிக் கூடம், I.T.I.–ஐ அமைக்க அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதியிலிருந்து 28 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திண்டிவனம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 26 காலியிடங்களும், உளுந்தூர்பேட்டை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 170 காலியிடங்களும், சங்கராபுரம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 47 காலியிடங்களும், சின்ன சேலம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 26 காலியிடங்களும், செஞ்சி தொகுதி சுற்று வட்டாரத்தில் உள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களான ராஜா தேசிங்கு I.T.I., காளையூரில் 96 காலியிடங்களும், கார்மல் I.T.I., நரசிங்கனூரில் 20 காலியிடங்களும், ஓம் சக்தி I.T.I., அவலூர்பேட்டையில் 24 காலியிடங்களும், ஸ்ரீ நடராஜா I.T.I., அசோகாபுரியில் 49 காலியிடங்களும் உள்ளன.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கல்லூரி இல்லை என்று சொல்லியிருக்கின்றார்கள். மேலும், அங்கு 25 உயர்நிலைப் பள்ளிகளும், 20 மேல்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன என்று கூறியுள்ளார்கள். அவர் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் தேவை என்று கேட்டிருக்கின்றார். ஆனால், இத்தனை அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் காலி இடங்கள் இருக்கின்றன. காலியாக இருக்கிற இடங்களை நீங்கள் பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.*

திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தில் 4 இடங்களில் உள்ள அரசு சார்ந்த I.T.I. மிகவும் தொலைவில் உள்ளன. கடைக்கோடியில் இருக்கின்ற கிராமத்திலிருந்து சின்ன சேலம் 128 கிலோ மீட்டர்,*

2018 ஜூலை 4]

சங்கராபுரம் 92 கிலோ மீட்டர், உளுந்தூர்பேட்டை 75 கிலோ மீட்டர் மற்றும் திண்டிவனம் 60 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளன. எனவேதான், மாணவ, மாணவியரின் நலன் கருதி, செஞ்சி தொகுதியில் அரசு சார்ந்த தொழிற்பயிற்சிக் கூடம் அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

அதேநேரத்தில், இந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர் என்பதால், இந்தக் கேள்வியையும் கேட்க விரும்புகிறேன். கொத்தடிமைத் தொழில் முறையை ஒழிப்பதற்காக மத்திய அரசு திட்டத்தின்கீழ் மாவட்டந்தோறும் கணக்கெடுப்பு மற்றும் விழிப்புணர்வுப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி சரிவர பயன்படுத்தப்படவில்லை.

அதுபோன்று, உயர்நிலை கண்காணிப்புக் குழுக்கள், மாவட்ட மற்றும் கோட்ட அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றனவா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியில் I.T.I. அவசியம் தேவைப்படின், புதிய தொழிற்பயிற்சி நிலையம் தொடங்கும் முன்னர், அப்பகுதியின் மாணவ, மாணவியர்களிடையே உள்ள வரவேற்பு, அப்பகுதியில் உள்ள தொழில் நிறுவனங்களில் ஏற்படும் வேலைவாய்ப்புகள் ஆகியவற்றை கள ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொத்தடிமைத் தொழிலாளர்கள் பற்றிப் பேசினார்கள். தமிழகத்தில், இதுவரை 276 கொத்தடிமைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசின் நலத் திட்ட உதவிகள் கொத்தடிமைத் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்றால், அந்தக் கொத்தடிமைத் தொழிலாளர்கள்தான் இவர்கள் என்று நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்க வேண்டும். அதன் பின்னர், அவர்களுக்கு மத்திய அரசிடமிருந்து நிவாரணங்கள் பெற்றுத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 270, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

270—

குடமுழுக்கு

***25169—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் அருள்மிகு அருளானந்த ஈஸ்வரன் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம் மற்றும் நகர், நாரணபுரம் கிராமம், அருள்மிகு அருளானந்தஈஸ்வரன் திருக்கோயில் பட்டியல் சாரா திருக்கோயிலாகும்.

இத்திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லை. உரிய நிதி ஆதாரம் பெற்று, திருப்பணி மேற்கொள்ள கருத்துரு பெற்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.